Registered as a Newspaper in Ceylon ✻ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389
National Tamil Daily
மலர் 9
இதழ் 210
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க ஆவணி 24 ஜ: அவ். 4 சனிக்கிழமை [9-9-57]

# நட்புறவுச் சங்கங்கள் மீது இங்கும் கண்காணிப்பு

கொழும்பு, வெள்ளி

வெளிநாட்டு நட்புறவுச்சங்கங்களின் நடவடிக்கைகள் பற்றிஇலங்கைஅரசாங்கமும் கண்ணோட்டம் செலுத்திவருகிறது.

கம்போடியாவிலுள்ள கம்போடிய வெளிநாட்டு நட்புறவுச் சங்கங்களைக் கலைத்துவிடுவதற்கு கம்போடிய அரசாங்கத் தலைவர் தீர்மானித்திருக்கிருர்.

இலங்கையிலுள்ள இலங்கை வெளிநாட்டுநட்புறவுச் சங்கங்கள்பல அவை அமைக்கப்பட்டகலாசார கலைஉறவுகள் தவிர்ந்த அரசியல் விவகாரங்களிலும் ஈடுபட்டுள்ளதாகவும் இதில் வெளிநாட்டுத் தூதரகங்கள் பலவும் உடந்தையாக இருப்பதாகவும் இரகசியப் பொலிசார் தமது விசாரணையில் கண்டுபிடித்துள்ளனராம்.

இதைத்தொடர்ந்து நட்புறவுச்சங்கங்களின்நடவடிக்கைகள் மீது கண்ணோட்டம் செலுத்த அரசாங்கம் உத்தரவிட்டிருப்பதாக அறியப்படுகிறது.

# "பழைய அங்கத்தவர் மீண்டும் தேர்தலில்போட்டியிடலாகாது"

## யாழ்ப்பாண மாநகரசபை தேர்தல்

## ஒரு மாஜி அங்கத்தவர் கருத்து

யாழ்ப்பாணம், சனி

''யாழ்ப்பாணம் மாநகரசபை தேர்தலில் பழைய அங்கத்தவர்கள் எவரும் போட்டியிட முன்வரக்கூடாது. பழைய அங்கத்தவர்கள் எல்லாரும் இதனை ஏற்றுக்கொண்டால் நானும் போட்டியிடமாட்டேன்.''

மாநகரசபை முன்னுள் உறுப்பினர் திரு. ஏ. ஜி. இராஜசூரியர் மேற்கண்டவாறு நமது நிருபரிடம் தெரிவித்தார்.

திரு இராஜசூரியர் மேலும் கூறியதாவது:-

மாநகரசபைக்கு புதிய அங்கத்தவர்கள்தெரிவுசெய்யப்படவேண்டுமென்பதே என் விருப்பம். அப்படியானல் தான் நகரம் முன்னேறும். பழைய அங்கத்தவர்கள் போட்டியிட்டால் மீண்டும் சில பழைய அங்கத்தவர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள். இதனால் நகரமுன்னேற்றம் தடைப்படும். பழையபடி மேயரை ஏற்றி இறக்கும்நாடகம் ஆரம்பமாகும்.

வட்டார பிரிவினைக்கு அவசரப்படத்தேவையில்லை. தேர்தல் நடைபெற்று புதிய சபை பதவியேற்று, கமிஷனர் நிர்வாகத்தில்என்னென்ன சீர்கேடு நடந்திருக்கிறதென்பதை கவனித்து பொதுமக்களுக்கு அறிவிக்கவேண்டும். அதன்பின் பிரிவினை நடத்தலாம். நிர்வாக பிழையினுல், மாநகரசபை கலைக்கப்படவில்லை. ஒரு கட்சியின் நலன் கருதியே கலைக்கப்பட்டதென்பது எனது கருத்து. நிர்வாகப் பிழையால் கலைக்கப்பட்டிருந்தால் குறிப்பிட்ட மேயர்மீது ஏன் நடவடிக்கை

[6-ம் பக்கம் பார்க்க]

## மலேரியா

### மீண்டும் பரவுகிறதாம்

கொம்பனித்தெரு, வெள்ளி

இலங்கையில் சிறிது காலம் 'தலைகாட்டாதிருந்த மலேரியா நோய் மீண்டும் நாட்டின் பலபகுதிகளிலும் தோன்றியுள்ளதாக அறியப்படுகின்றது. இதுவரை இலங்கையின் பலபகுதிகளிலும் 781 பேருக்கு மலேரியாக் காய்ச்சல் பீடிக்கப்பட்டிருப்பதாகவும் இந்நோய் மிக வேகமாக பரவிவருவதாகவும் மீண்டும் இந்நோயை முற்றாக ஒழிப்பதற்குச் சுகாதார பகுதியினர் அதிசிரத்தை எடுத்துவருவதாகவும் தெரிகிறது.

இந்தியா போன்று

## விகிதாசாரப்படி உரிமை வேண்டும்

### உரிமை குறைந்த தமிழர் சங்கம் கோருகிறது

கொழும்பு, வெள்ளி

''இந்தியாவில் போன்று இலங்கையிலும் ஒடுக்கப்பட்ட சமூகத்தினருக்கு கல்வி, உத்தியோகம், அரசியல் பிரதிநிதித்துவம் ஆகிய விஷயங்களில் விகிதாசாரப்படி ஒதுக்கவேண்டும்'' என்று உரிமை குறைந்த தமிழர் முன்னேற்றச் சங்கம் கல்வி அமைச்சருக்கும் அரசாங்கத்துக்கும் சமர்ப்பித்துள்ள ஒரு மகஜரில் கேட்டுள்ளது.

தீண்டாமைப் பிரச்னை வட பகுதியில் மிக மோசமாகியிருப்பதாகவும் பலவிதங்களிலும் உரிமை குறைந்த தமிழர் ஒடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கும் இந்த மகஜரில் உரிமை குறைந்த

[6-ம் பக்கம் பார்க்க]

## வடபகுதி அங்கவீனருக்கு ஈராக்கின் ஈச்சம்பழம்

யாழ்ப்பாணம், சனி

வடபகுதியின் அச்சகினர்களுக்கு ஈராக் நாட்டு பேரீச்சம்பழம் வெகுவிரைவில் கிடைக்கவுள்ளது.

ஈராக் அரசாங்கம் இதனை இலவசமாக வழங்கவிருக்கிறது.

பேரீச்சம்பழத்தில் அடங்கியுள்ள விசேஷ உயிர்ச்சத்து மனிதஎலும்புகளுக்கு உறுதியையும் வளர்ச்சியையும் கொடுக்குமென்றும் வலதுகுறைந்தவர்களின் எலும்புகளுக்கு புதுத்தெம்பையும் உற்சாகத்தையும் கொடுக்கும் என்ற வைத்திய நிபுணர்களின் அபிப்பிராயத்தின் பிரகாரமே ஈராக் அரசாங்கம் தனது முக்கிய ஏற்றுமதிப்பொருளான பேரீச்சம் பழத்தை வடபகுதியிலுள்ள அங்கவீனர்களுக்கு வழங்க முன்வந்துள்ளதாகத் தெரிகிறது.

[வி. நி]

## மாலைதீவுக்கு விமான சேவை

கொழும்பு, வெள்ளி

இலங்கைக்கும் மாலைதீவுக்குமிடையில்இன்று விமான சேவை சம்பந்தமாக ஒரு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

இவ்வுடன்படிக்கையின்படி எயர்சிலோன் தினசரி மாலைதீவுக்குவிமான சேவை நடத்தும். அதுபோலவே மாலைதீவு விமான சேவை ஆரம்பித்தவுடன் அந்த விமானங்கள் இங்கு வந்துபோக உரிமை வழங்கப்படும்.

## ஏழைகளுக்கு இலவச சட்ட நிபுணர் உதவி

யாழ்ப்பாணம், சனி

வடபகுதியில் அரசாங்கத்தின் தர்மப்பணம் பெறும் மக்களுக்கு இலவசமாகச் சட்ட நிபுணர்களின் உதவியளிக்க யாழ்ப்பாண சமூகசேவைப்பகுதி ஒழுங்குகள் செய்துள்ளது.

தமது உழைப்பினுல் உணவருந்திச் சீவிக்க முடியாத ஏழை மக்களுக்கே அரசாங்கம் தர்மப்பணம் கொடுக்கிறது. எனவே அப்படிப்பட்ட ஏழை மக்களுக்கு ஏற்படும் வழக்குகளுக்கு ஏற்படும் செலவுகளுக்கு அவர்கள் கஷ்டப்படவேண்டும் என்பதை உணர்ந்த சமூகசேவைப்பகுதி அதிகாரி திரு. திருச்செல்வம் யாழ்ப்பாணம் சட்ட வல்லுனர் சங்கத்துடன் தொடர்புகொண்டு அரசாங்கத்திடம் தர்மப்பணம் பெறும் மக்களுக்கு சட்ட உவியளிக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்த உதவி இவ் ஏழைகளுக்கு விரைவில் அளிக்கப்படவுள்ளது. இதுசம்பந்தப்பட்ட உதவி தேவையான ஏழைமக்கள் சமூக சேவைப்பகுதி அதிகாரி திரு. திருச்செல்வத்துடன் தொடர்புகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(வி. நி)

# 12,200 பேர் இந்தியப் பிரஜைகளாயினர்

கொழும்பு, வெள்ளி

இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினரில் நாடற்றவர்களான 12,200 பேருக்கு இலங்கை இந்திய ஒப்பந்தத்தின்படி இந்தியப் பிரஜாவுரிமை வழங்கப்பட்டிருப்பதாக இலங்கையிலுள்ள இந்திய தூதரகம் அறிவித்துள்ளது.

கடந்த மாதத்திலமட்டும் 546 பேருக்கு இந்திய பிரஜாவுரிமை வழங்கப்பட்டுள்ளது.

பிரஜாவுரிமைவழங்கப் பட்டவர்களில் 3,000 பேர் இதுவரை தென்னிட்டில் குடி அமைத்து [illegible]

சீனுவில்

## பலம்வாய்ந்த எதிர் இயக்கம்

ஹாங்காங், செப். 8

சீன அரசாங்கத்துக்கு எதிராக பலம் வாய்ந்த ஸ்தாபனம் ஒன்று மறைமுகமாக செயல்பட்டுவருகின்றதாம்.

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

அதிருப்தியில் இருந்து அமைதியின்மை உண்டாகின்றது. அமைதியின்மையால் பலர் சாவது, பலர் சிறைப்படுவது, பலர் நாடு கடத்தப்படுவது ஆகியவையெல்லாம் உண்டாகின்றன.

— மகாத்மாகாந்தி.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கஞு
ஆவணி மீ 24 உ (9-9-67)

## மேற்கு ஆசியா


சூயஸ்கால்வாய் பகுதியில் கடந்த மூன்று தினங்களாக இஸ்ரேலிய துருப்புகளுக்கும் ஐக்கிய அரபுக் குடியரசுத் துருப்புகளுக்குமிடையில் தொடர்ந்து மோதல் ஏற்பட்டு வந்திருக்கிறது. இதே சமயம்சென்ற ஜூன்மாத சண்டையின்போது கடுமையாகப்பாதிக்கப்பட்ட ஐக்கியஅரபுக் குடியரசு, ஜோர்டான், சிரியா ஆகிய மூன்று அரபுநாடுகளிலும் மீண்டும் இராணுவம் துரிதமாகப் பலப்படுத்தப்பட்டுவருகிறது.

சூயஸ்கால்வாய்ப் பகுதியில் அடிக்கடி ஏற்படும் சிறுசிறு கைகலப்புகள் மீண்டும் மேற்கு ஆசியாவில் பெரிய மோதலாகி மற்ருெரு யுத்தத்துக்கு வழிவகுக்கக்கூடிய ஆபத்து தோன்றுகிறது. ஜூன் மாதச் சண்டையின் போது இஸ்ரேலியர் தாம் பிடித்த பகுதிகளை விடமுடியாதெனத் தெரிவித்து வருகின்றனர். மேற்கு ஆசியாவில் சண்டையை நிறுத்தும்படி ஐ.நா. பாதுகாப்புச்சபை உத்தரவிட்ட அதேசமயம் இரு தரப்புப் படைகளும் யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்னிருந்த நிலைகளுக்குத் திரும்பிச் செல்லவேண்டுமென்று உத்தரவிடத் தவறியதும் மேற்கு ஆசியாவில் நிரந்தர அமைதி ஏற்பட முடியாதிருப்பதற்கு ஒரு காரணம் என்று சொல்லலாம்.

சண்டை நிறுத்தம் சரியானமுறையில் செயல்படக்கூடியதாக இருக்கவேண்டும். இல்லையேல் சண்டைநிறுத்தம், மற்ருெரு பெரிய மோதலுக்கு இரு தரப்பினரும் தம்மைத் தாமே தயார் செய்துகொள்வதற்கு வசதியளிக்கும் ஓர் இடைக்கால ஓய்வாகவே இருக்கும். தகராறுள்ள பல நாடுகளில் இப்படித்தான் இருந்திருக்கிறது. மேற்கு ஆசிய சண்டை நிறுத்தமும் மற்ருெரு யுத்தத்துக்குத் தயார் செய்யும் இடைக்கால ஓய்வாகவே பயன்படுகிறது. மேற்கு ஆசிய நிலைமை சீராகாதவரை மேற்கு ஆசியாவுக்கு மட்டுமல்ல குறிப்பாக ஆசிய நாடுகளுக்கும் பொதுவாக உலக நாடுகளுக்கும் பலவிதங்களிலும் கஷ்டம் அதிகரிக்கும். சூயஸ்கால்வாய் மூடப்பட்டிருப்பதால் இலங்கை முதலிய நாடுகளுக்குப் பண்டங்களை ஏற்றிவரும் கப்பல்கள் பல மைல் தூரம் பிரயாணம் செய்து வந்துசேரவேண்டியிருக்கிறது. கப்பல் கட்டணம் உயர்ந்து பண்டங்களின் விலை அதிகரித்து மக்களின் வாழ்க்கைச் செலவு உயர்ந்துவிடுகிறது.

அரபுநாடுகள் தங்களுடன் நேரடிப்பேச்சு வார்த்தை நடத்திமேற்கு ஆசியப் பிரச்னைக்கு நிரந்தரத்தீர்வு காணலாமென இஸ்ரேல் பிரதமர் மீண்டும் வலியுறுத்தியிருக்கிருர். ஆனுல் இஸ்ரேலை அங்கீகரிப்பதற்கு அரபுநாடுகள் இன்னமும் தயாரில்லை.

நிலைமை இப்படியே இருந்தால் உலக அமைதிக்கு மட்டுமல்லாது சிறிய நாடுகளுக்கு அதிக ஆபத்து ஏற்படலாம். ஐ. நா. ஸ்தாபனம்மூலம் ஒரு நிரந்தர சமாதானம் ஏற்படுத்துவதற்கு இலங்கை உட்பட ஆசிய நாடுகள் தீவிரமுயற்சி செய்தால் ஓரளவாவது பயன்கிடைக்காமல் போகாது என்று நம்பலாம்.



சோதிடக் கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளைக்கு மட்டக்களப்பு மேயரும் முதல்எம். பி.யுமான திரு. செ. இராஜதுரை, சமீபத்தில் பாராட்டுப் பத்திரம் வழங்கி, அவர் சோதிடத்துறையில் ஆற்றிவரும் சேவையைக் கௌரவித்தார். இலங்கை, இந்தியா, மலேசியா மற்றும் வெளி நாடுகள் பலவற்றிலுமுள்ள பலரின் பாராட்டையும் ஆதரவையும் பெற்றுள்ள சோதிடக் கலாநிதி 'ஈழநாடு' தினப் பதிப்பில் இன்றைய பலனும், வாரமலரில், வாசக நேயர்கள் தங்கள் எதிர்காலம் பற்றிக் கேட்கும் கேள்விகளுக்கு 'உங்கள் பலன்' பகுதியில் பதிலும் அளித்துவருகிருர்.

# 'தாய்மொழிக்கு உரிய இடமளிக்க தகுந்த சூழ்நிலையை உருவாக்குங்கள்'

## மாணவர்களுக்கு அண்ணா அறிவுரை

மதுரை, செப். 8

நாட்டின் ஒற்றுமையைக் காக்கவேண்டியதன் அவசியத்தை தமிழக முதல்மந்திரி திரு. சி. என். அண்ணுதுரை நேற்று மதுரைப் பல்கலைக்கழகத்தின் முதலாவது பட்டமளிப்பு விழாவில் வலியுறுத்திஞர்:

தமிழ்மொழியைக் கற்கும்படியும், தாய்மொழியான தமிழ்மொழி போதனு மொழியாகக் கல்வி, நிர்வாவாகத் துறைகளில் இடம் பெறுவதற்கானசூழ்நிலையை உருவாக்க நடவடிக்கைகள் எடுக்கும்படியும்அவர் மாணவர்களைக் கேட்டுக்கொண்டார்.

மாணவர்களிடையே நிலவும் அமைதியின்மைபற்றி அவர் குறிப்பிடுகையில். அவர்களிடையே நன்குவகுக்கப்பட்ட லட்சியங்கள் இல்லாததும், அவர்களை வழிப்படுத்தவேண்டிய முதியவர்கள் பிழையான வழியில் நடந்துகொள்வதுமே அதற்கு முக்கிய காரணங்களாகுமெனக் கூறிஞர்.

நல்ல, பயனுள்ள அறிவைப் பெறவும், சமூகத்துக்குச் சிறந்த பணியை ஆற்றவும், தக்கமுறையில் கல்விப் பாடத்திட்டம் அமையவேண்டும் எனவும் முதல் மந்திரி கூறிஞர்.

## இன்றைய பலன்

9-9-67
சனிக்கிழமை
(ஆவணி மாதம் 24உ)

நட்சத்திரம்- விசாகம்
திதி- பஞ்சமிகாலை 6-49 வரை மேல் ஷஷ்டி
சுபநேரம்- 3-04 - 4-34
ராகுகாலம்- 9-04— 10-34

மேடம்- வாழ்க்கை நலன், வழியும் பிறக்கும்.
ரிஷபம்- பந்துக்கள் கலகம், பகை மூட்டம்.
மிதுனம்- கற்றவர் உறவு, துணிவேதுணை.
கடகம்- நலன்தரும் நடவடிக்கை, நல்லமுன்னேற்றம்.
சிம்மம்- கலகலக்கும் பணம், சலசலக்கும் வாழ்வு.
கன்னி- கடன்படநேரிடும். மதிப்பில்மந்தம்.
துலாம்- குசுகுசுப் பேச்சு, குமைச்சல்அதிகம்
விருச்சிகம்- உயர்ந்த நோக்கு, உரிமைகிடைக்கும்.
தனுசு- அவநம்பிக்கை, ஆசாரக்குறைவு.
மகரம்- அன்னைவழி ஆதரவு, அறிவுக்குவிருந்து
கும்பம்- விவாகத்தில் வெற்றி. நிமிர்ந்தநடை.
மீனம்- எண்ணத்தில் தடை, சுமைகள் அதிகம்.

—சோதிடக் கலாநிதி—
திருமலை வேலுப்பிள்ளை

## பிரிட்டிஷ் சஞ்சிகை கண்காட்சி

யாழ்ப்பாணம், சனி

இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் கவுன்சிலின் ஆதரவில் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் பிரிட்டிஷ் சஞ்சிகைகளின் கண்காட்சி ஒன்று யாழ்ப்பாண மத்திய கல்லூரி நூலகத்தில் இன்று ஆரம்பமாகிறது. போயா தினத்தன்று முடிவடையும் இக் கண்காட்சியில் இருநூற்றுக்கும் அதிகமான சஞ்சிகைகள் காட்சியில் இருக்கும். ஓவியம், சிற்பம், கல்வி பொதுவிஞ்ஞானம், மொழி, இலக்கியம், திரைப்படக்கலை, விளையாட்டுகள் சம்பந்தமான சஞ்சிகைகளும், மாதர் இதழ்கள், சிறுவர் சஞ்சிகைகள், பொது விவகாரங்கள் சம்பந்தமான சஞ்சிகைகளும் இக் கண்காட்சியில் இடம் பெறவிருக்கின்றன.

## புதிய உபதபாற் கந்தோர்கள்

உடுப்பிட்டி, வெள்ளி

வடமராட்சிப் பகுதியில் இவ்வருட இறுதிக்குள் இரு புதிய உபதபால் நிலையங்களை நிறுவ தபாற் தந்திப் போக்குவரத்து அமைச்சர் திரு. மொண்டேகு ஜெயவிக்கிரமா முடிவுசெய்துள்ளார். கரணவாய் தெற்கு மண்டான் குடியேற்றத் திட்டத்திலும், நாகர் கோவிலிலுள்ள சாளம்பன் என்னுமிடத்திலுமே இருபுதிய உபதபாற்கந்தோர்கள் நிறுவப்படவிருக்கின்றன. உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரத்தின் முயற்சியின் பயனுகவே அமைச்சர் புதிய உபதபாற் கந்தோர்களை நிறுவ இணக்கம் தெரிவித்துள்ளார்.

## நாட்டிலும் நகரிலும்

1950-ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழ் விழாவுக்கு தென்னுட்டிலிருந்து பல அறிஞர்களும் கலைஞர்களும் வந்திருந்தார்கள். ஆசிரியர் 'கல்கி' கிருஷ்ண மூர்த்தியும் வந்தார். ஒரு பொதுக் கூட்டத்தில் இலங்கையின் முன்னுள் உதவி கல்வி அதிபர் திரு. கே. எஸ். அருள்நந்தியும் கல்கியும் கலந்து கொண்டார்கள்.

திரு. அருள்நந்திக்கு அடுத்த படியாக கல்கி பேச எழுந்தார். "திருவாளர் அருள்நந்தியின் பேச்சில் தமிழ் மணம் கமழ்கிறது, அவருடைய வாயில் சுருட்டு மணம் கமழ்கிறது!" என்ருர். சபையில் இருந்தவர்கள் எல்லோரும், திரு. அருள் நந்தி உட்பட, குலுங்கக்குலுங்கச்சிரித்தார்கள்.

கல்கி, அரசியல் எழுதினுலும் சரி, கதை எழுதினுலும் சரி, கட்டுரை எழுதினுலும் சரி எல்லாவற்றிலும் ஒரு ஹாஸ்ய ரேகை லேசாக, எவருக்கும் தீங்கு செய்யாமல், படர்ந்திருக்கும்.

கல்கியின் குருவாகவும் வழி காட்டியாகவும் விளங்கியவர் திரு. வி. க. என்று சொல்லப்படும் கல்யாண சுந்தர முதலியார். இவர்தான் தமிழ் நாட்டு பத்திரிகை உலகில் ஒரு ஜாம்பவான் என்று இன்றும் கருதப்படுபவர்.

கல்கி சிறு வயதில் ஒரு நாள் முதன் முறையாக திரு. வி. க. வைப் பார்க்கச் சென்ருர்.

அப்பெரியார் கல்கியைப் பார்த்துச் சிறிது நேரம் பேசிய பின் 'தம்பி, நீ இன்னும் முன்னுக்கு வர வேண்டியவன்' என்ருராம். கல்கி உடனே இரண்டு மூன்றடி நடந்து போய் முன்னுல் நின்ருர்.

இந்தச் சம்பவத்தை கல்கியே ஓரிடத்தில் எழுதியிருந்தார்.

கல்கி 'ஆனந்த விகடனி,லிருந்த போது தமிழ் நாட்டின் முதலாவது கேலிச் சித்திரக்காரரான மாலியுடன் இலங்கைக்கு விஜயம் செய்தார். அவர்கள், சென்ற இடங்களெல்லாம் கல்கி ஹாஸ்யமாகப் பேச, மாலி கேலிச்சித்திரங்கள் வரைந்து ஜனங்களை மகிழ்வித்தார்கள்.

கல்கி கடைசிக் காலம் வரை மறைமுகமாகவே இருந்து இலக்கியத் தொண்டு புரிந்தார். ரசிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியாரும் ராஜாஜியும் அவருடைய எழுத்து வன்மையை அறிந்து கொண்டு அவருக்கு உற்சாகம் அளித்தார்கள். ராஜாஜியின் தொடர்பு காரணமாக கல்கியும் அரசியல் விஷயங்களில் தீவிரமாக ஈடுபடத் தொடங்கிஞர்.

இதற்குப் பின்பு தான், கல்கி எப்படிப் பட்டவர் என்பதையே அறியாதிருந்த மக்கள் அவருடைய புகைப் படத்தை பத்திரிகைகளில் கண்டார்கள்.

எழுத்தாளராக வாழ்க்கை ஆரம்பித்த கல்கி கடைசி நாட்களில் ஒரு சிறந்த பேச்சாளராகவும் விளங்கிஞர். ஆனுல் தமிழுலகம் இன்றும் அவரை ஒரு சிறந்த எழுத்தாளராகவே கருதி வருகிறது.

—வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மா சே துங்கும் ஆதரவாளரும் கம்யூனிஸ எதிர்ப்புரட்சிவாதிகளே'

## சோவியத் தலைவர் பிரெஷ்னெவ் வன்மையான கண்டனம்

புடாபெஸ்ட், செப், 8

சீனத் தலைவர் மா சே துங்கும், அவரது சிஷ்யர்களும் கம்யூனிஸத்தின் எதிர்ப் புரட்சி வாதிகளேயன்றி வேறொன்றுமில்லையென ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் காரியதரிசி திரு. பிரெஷ்னெவ் குற்றஞ் சாட்டியுள்ளார்.

புடாபெஸ்டில் நடைபெற்ற ஹங்கேரி - ரஷ்ய நட்புறவுச் சங்கத்தின் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். கூடியிருந்த பிரதிநிதிகள் அவரது கூற்றைக் கைதட்டி வரவேற்றனர்.

**மிக வன்மையான கண்டனம்**

ரஷ்யா சீன மீது இதுவரை தொடுத்த மிக வன்மையான கண்டனம் இது வெனக் கூறப்படுகிறது.

சீனாவில், செங்காவலரின் வெறியினால், மனிதத் தன்மையற்ற, கொடுமையான அடக்குமுறை கட்டவிழ்த்து விடப் பட்டிருப்பதாகத் திரு. பிரெஷ்னெவ் மேலும் கூறினார்.

கலாச்சாரப் புரட்சி என்ற போர்வையில் சீன, சர்வதேசக் கம்யூனிஸத்துக்கு எதிரான புரட்சியையே நடாத்துகின்றது அல்லாமல் ஏகாதிபத்திய வாதத்துக்கு எதிராகவல்ல என்றும் திரு. பிரெஷ்னெவ் குறிப்பிட்டார்.

**மா ஆதரவாளர்க்கு ஆபத்து**

இந்த உண்மையைச் சீன இராணுவம் உணர்ந்து வருவதாகவும், மா ஆதரவாளர்களுக்கு எதிர்ப்பு வலுவடைந்து வருவதாகவும், அவர்களுக்கு ஆபத்து ஏற்படும் நிலை உண்டாகியிருப்பதாகவும் திரு. பிரெஷ்னெவ் கூறினார்.

# திருச்சி மாநாடு பற்றிய ம. பொ. சி. குற்றச்சாட்டு

## தமிழரசுக் கழகம் மறுப்பு

திருச்சி, செப். 8

தமிழரசுக் கழகத்தின் [பார்லிமெண்டரி கட்சி] பொதுக் காரியதரிசி திரு. சி. ஆர் சந்தானமும், கலாச்சாரக் காரியதரிசி புலவர் கிரனும் பின்வரும் அறிக்கையை இங்கு வெளியிட்டுள்ளனர்.

'சமீபத்தில் நடந்த தமிழரசுக் கழகத்தின் திருச்சி மாநாட்டையும், பொதுக்குழுக் கூட்டத்தையும் காங்கிரஸ்காரரால் தூண்டி விடப்பட்டவை' என்று திரு. ம. பொ. சிவஞான கிராமணி வர்ணித்துள்ளது வருந்தத்தக்கதாகும்.

பார்லிமெண்டரி கட்சியாகக் கழகம் நீடிக்க வேண்டும் என்ற தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்த 105 அங்கத்தினர்களும் அவருடைய தீவிர ஊழியர்கள். கழகம் தன் தனித்தன்மையை இழக்கலாகாது என அவர்கள் மனப்பூர்வமாக எண்ணுகிறார்கள்.

மாநாடு சட்ட விரோதமானது என்று திரு. கிராமணி கூறியதைக் கண்டு அவர்கள் வியப்படைகிறார்கள். அப்படியானால் அவர் போக்கை ஆதரிக்கும் நிர்வாகக் குழுவின் 6 அங்கத்தினர்கள் அதில் ஏன் கலந்து கொண்டார்கள்?

காரியக் கமிட்டியின் 21 பேரில் மூவர் தான் கூட்டத்தில் கலந்து கொண்டதாக அவர் கூறியது தவறு. கூட்டத்தில் 9 அங்கத்தவர்கள் கலந்து கொண்டார்கள். அதில் 6 பேர் அவர் போக்கை ஆதரிப்பவர்கள். மாநாட்டு ஆஜர் பட்டியலிலும் அவர்கள் கையெழுத்திட்டனர்.

திருச்சி மாநாட்டின் அலுவல் பதிவுப் புத்தகத்தைப் பாரபட்சமற்ற பார்வையாளர் பார்ப்பதற்கு அனுமதிக்க நாம் தயார். சேலம் பொதுக்குழு கூட்ட அலுவல் பதிவுப் புத்தகத்தைக் காட்ட திரு. சிவஞானம் தயாரா?

பார்லிமெண்டரி கட்சியாகத்தான் பணியைக் கழகம் நீடிக்கும் என மீண்டும் வலியுறுத்துகிறோம். எதிர்கால வேலைத் திட்டத்தை வகுக்க தமிழரசுக் கழகத்தின் மாநில மாநாடு அடுத்த மாதம் கும்பகோணத்தில் நடக்கும்.

## அமெரிக்கா பயணம்

யாழ்ப்பாணம், வெள்ளி

கொழும்பு சென் ஜோசேவ் கல்லூரியைச் சேர்ந்த செல்வி சேர்லி அச்சுதன் பி. ஓ. ஏ. சி. மூலம் அமெரிக்கா சென்றுள்ளார். அவர் அங்கு ஆசிரியராக கடமையாற்றுவார். இவர் யாழ்ப்பாணம் கன்னியாஸ்திரிகள் மடத்தின் பழைய மாணவியாவர். இவர் மாணவியாயிருந்தபொழுது பல சமூகத் தொண்டில் ஈடுபாடு காட்டிவந்தார். செல்வி அச்சுதன் வெள்ளவத்தையைச் சேர்ந்த டாக்டர் அச்சுதன் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியாவர்.

## லெபனன் முடிவு

பெய்ரூட், செப். 8

அமெரிக்காவுடனும், பிரிட்டனுடனும் ராஜிய உறவுகளை மீண்டும் வைத்துக் கொள்வதென லெபனன் முடிவுசெய்துள்ளது.

மேற்கு ஆசியப்போரைத் தொடர்ந்து, இவ்விருநாடுகளுடனும் லெபனன், ராஜிய உறவுகளை முறித்துக்கொண்டிருந்தது.

## காண்டனில் இரத்தக்களரி விரைவில் ஏற்படும்

ஹொங்கொங், செப். 8

சீனாவிலிருந்து ஹொங்கொங் வந்துள்ள பிரயாணிகளின் செய்திகளின்படி, காண்டனில் விரைவில்மீண்டும் இரத்தவெள்ளம் பாய்ந்தோடும் நிலைமை ஏற்படுமென நம்பப்படுவதாகத் தெரிகிறது.

இம்மாதம் 10ந் திகதியில், காண்டானில் கடும்சண்டை நிகழலாம் என்று இப்பிரயாணிகள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

## பெரு மந்திரிசபை ராஜினாமா

லிமா, செப். 8

தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றான பெருவில், அதன் மந்திரிசபை ராஜினாமாச் செய்துள்ளது நாணய மதிப்புக் குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து, மந்திரிசபை ராஜினாமாச் செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# 'இன்னும் 2 அல்லது 3 வருடங்களில இந்திய தொழில்வளம் முன்னேறும்'

## லண்டனில் இந்திய துணைப்பிரதமர்

லண்டன், செப். 8

'இந்தியாவின் தொழில் வளம் பெருகிக் கொண்டிருக்கிறது. இன்னும் 2 அல்லது 3 ஆண்டுகளில், தனது தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன், மேலதிகமாகவும் உற்பத்தி செய்யும் சக்தி அதற்குக் கிடைக்குமென நம்புகிறேன்.

இவ்வாறு, பிரிட்டனுக்கு தற்போது விஜயம் செய்துள்ள இந்திய துணைப் பிரதமரும், நிதி மந்திரியுமான திரு. மொரார்ஜி தேசாய், 400 வர்த்தகர்களடங்கிய தொழிலதிபர்கள் மாநாடொன்றில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், இந்தியாவின் முதலிரண்டு ஐந்து ஆண்டுத் திட்டங்கள் வெற்றிகரமாக அமைந்ததாகவும், மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம் வரட்சி, மற்றும் காரணங்களினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

தனது சக்திக்கு அப்பாற்பட்ட காரணங்களினால் பாதிக்கப்பட்டுள்ள இந்தியாவுக்கு இப்போது தான் நண்பர்களின் அனுதாபம் கிடைக்க வேண்டுமென்றும் திரு. தேசாய் தெரிவித்தார்.

**சீன அபாயம்**

சீனாவின் அபாயம் பற்றி அவர் குறிப்பிடுகையில், இந்தியாவின் வட கோடியில் பெரும் பகுதியைச் சீனா பிடித்துள்ளதாகவும், அதனை மீட்க இந்தியா தன்னை வலுப்படுத்திக் கொள்ள வேண்டியுள்ளதாகவும் கூறினார்.

சீனாவில் சர்வாதிகார ஆட்சிமுறை இயங்குவதாகக் கூறிய திரு. தேசாய், அதற்கு மாறாக ஜனநாயக ஆட்சி விளங்கும் இந்தியா, ஜனநாயகம் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் சக்தியுள்ளது என்பதை நிரூபிக்க வேண்டியிருப்பதாகக் கூறினார்.

நேற்று திரு. தேசாய்க்கு பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சன் அளித்த பகல் விருந்தில், திரு. தேசாய் திரு. வில்சனுடன் பூர்வாங்கப் பேச்சுக்கள் நடாத்தினார்.

## ரஷ்யப் பிரதமர் இந்தியா வருகிறார்



புதுடில்லி, செப். 8

ரஷ்யப் பிரதமர் திரு. கொஸிஜின் இந்தியாவுக்கு டிசெம்பர் மாதத்தில் விஜயம் செய்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது. திகதி இன்னும் குறிப்பிடப்படவில்லை.

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் ஒரு நீண்ட கால அழைப்பை ஏற்றே அவர் இந்தியாவருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

## சிவசேனைக்கு கண்டனம்

திருவனந்தபுரம், செப். 8

கேரள முதல்மந்திரி திரு. ஈ. எம். எஸ். நம்பூதிரிபாத் பம்பாயில் இயங்கும் சிவசேனையின் நடவடிக்கைகளைக் கண்டித்துள்ளார்.

இதற்கிடையில் சிவசேனையைத் தடைசெய்யுமாறு மகாராஷ்டிர அரசாங்கத்தைக் கோரும் ஒரு தீர்மானம் கேரள கம்யூனிஸ்ட் கட்சியின் பேரவையினால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

## மாணவர் சங்கடம்

சங்கானை, வெள்ளி

மேற்குப்பகுதியில் தொடர்ந்து நடைபெற்று வரும் சீர்கேடான பஸ் சேவை காரணமாக இப்பகுதி மாணவ மாணவிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள்.

## மகோற்சவம்

கோப்பாய், சனி

நீர்வேலி அரசகேசரி விநாயகராலய வருடாந்த மகோற்சவம் இன்று கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகிறது. எதிர்வரும் 17ந் திகதி புதிய சித்திரத்தேர் பவனியும், 18 ந்திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

# ஐ. அ. கு. ஜனாதிபதி நாஸருக்கு எதிரான அமீர் புரட்சிச்சதி

## பரபரப்பூட்டும் விபரங்கள்

கெயிரோ, செப். 8

ஐக்கிய அரபுக் குடியரசு ஜனாதிபதி நாஸருக்கு எதிராகத் திட்டமிடப்பட்ட இராணுவச்சதி வெற்றியடைந்திருந்தால், முன்னாள் இராணுவத்தளபதி பீல்ட் — மார்ஷல் அமீரை ஜனாதிபதியாகவும், முன்னாள் போர் மந்திரி பத்ரானைப் பிரதமராகவும்கொண்ட ஆட்சி அமைப்பு ஒன்றுஐ. அ. கு வில்பதவியேற்றிருக்குமென நம்பப்படுகிறது.

நாஸர் வீழ்த்தப்பட்டதும். அதிகாரத்தை ஏற்றுக்கொள்ள, மந்திரிகள் ஜாபிதாவொன்றைச் சதிகாரர் தயாராக வைத்திருந்ததாகச் சொல்லப்படுகிறது. அவமரியாதை செய்யப்பட்ட முன்னாள் விமானப்படைத் தளபதி சித்தி மகம்மது அம் மந்திரிகளில் ஒருவராவார்.

இராணுவப் புரட்சிக்கான ஆயுதங்கள் பெரிய அளவில் திட்டமிடப்பட்டதாகத் தெரிகிறது. அமீனின் வாசஸ்தலத்திலிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் 10 லொறிகளை நிரப்பியிருக்கும் என்ற உண்மையிலிருந்து இது புலப்படுகிறது. இந்த ஆயுதங்களில் டாங்கி எதிர்ப்புத் துப்பாக்கிகளும் அடங்கியிருந்தன.

ஆகஸ்ட் 26-ந்திகதிக்கிடையில் ஆயுதந்தரித்த படையாக இந்தச் சதிஇயக்கம் வளர்ந்துவிட்டிருந்தது. அதற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு முதற்படியாக, அமீரின் வாசஸ்தலத்திலிருந்து சதிகாரரை வெளியேற்ற, பல பொலிஸ்காரர்களின் உதவியுடன் 2,000 துருப்பினர் வெளியே நிறுத்தப்பட்டனர்.

வாசஸ்தலத்துக்குள்ளேயிருந்தவர்கள் வெளியே வந்து சரணடைவதற்கு ஐந்து நிமிடஅவகாசம்அளிப்பதாக எச்சரிக்கைகள் ஒலிபெருக்கிகள்மூலம் கொடுக்கப்பட்டன. அந்த ஐந்து நிமிட அவகாசம் முடிவுற்றதும், இரண்டாவது எச்சரிக்கை ஒன்று அளிக்கப்பட்டதுடன், துருப்பினரும் நடவடிக்கைக்குத் தயாராகினர்.

ஆனால், அடுத்த நிமிடத்தில், உள்ளேயிருந்தவர்கள் அனைவரும் வெளியே வரிசையாக வந்து சரணடைந்தனர்.

# வடக்கு - தெற்கு வியட்னாமுக்கிடையே

## முள்ளுக்கம்பித் தடைப்பாலம்

### அமெரிக்கர் அமைக்கிறார்கள்

வாஷிங்டன், செப். 8

வியட்னாமிலுள்ள போர் விலக்கப் பிராந்தியத்துக்குத் தெற்கே, வடவியட்னாமுக்கும் தென்வியட்னாமுக்குமிடையேயான தடைப்பாலமொன்றை அமெரிக்கத் துருப்புகள் அமைத்துவருகின்றன.

இத்தகவலை அமெரிக்க பாதுகாப்புக் காரியதரிசி திரு. மக்னமாரா தெரிவித்துள்ளார். இந்தத் தடை சுருள் முள்ளுக் கம்பியினாலும், வேறுபல உயர்ந்த ரகப் பொருட்களாலும் அமைக்கப்படுவதாகக்கூறிய திரு. மக்னமாரா, அவை என்ன என்பதை வெளியிடவில்லை.

தடையை அமைக்கும் நோக்கத்துக்காக, ஏற்கனவே அமெரிக்கத் துருப்புகள், 15 மைல் நீளமான, அடர்ந்த காட்டுப்பகுதியை வெட்டுவதில் ஈடுபட்டிருப்பதாகவும் திரு. மக்னமாரா தெரிவித்துள்ளார்.

வடவியட்னாமின் ஊடுருவலைத் தடுக்கவே இந்தத் தடைப்பாலம் அமைக்கப்படுவதாகக் கூறிய திரு. மக்னமாரா, இது அடுத்த வருட முற்பகுதியில் இயங்க ஆரம்பிக்குமெனத் தெரிவித்தார்.

பாலம் கட்டி முடிந்ததும், வடவியட்னாமிலிருந்து ஊடுருவல் செய்வது கஷ்டமாகிவிடும் என்று நம்பிக்கை தெரிவித்த திரு. மக்னமாரா, எந்த ஒரு நடவடிக்கையும் ஊடுருவலை அடியோடு நிறுத்திவிட முடியாது என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டுமெனக் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எஸ். ஜே. வி. கோரியுள்ளார்

காங்கேசன்துறை, வெள்ளி

காங்கேசன் துறைக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையில் நடைபெறும் புகைவிரதசேவையில் சில சமயங்களில் தாமதமேற்படுவதால் பாடசாலை செல்லும் மாணவர்களும் அரசாங்க உத்தியோகத்தர்களும் பல மணி நேரம் தாமதித்தே தத்தமது அலுவல்களுக்குச் செல்லவேண்டியிருப்பதாகவும், தெல்லிப்பழைப் புகைவிரதநிலையத்தில் தண்ணீர் வசதி அளிக்கப்படாதது பற்றியும் குறிப்பிட்டு இச்சிறிய விஷயங்களை உடனடியாகக் கவனிக்குமாறும் தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் புகையிரத இலாகாத் தலைவரைக் கேட்டுள்ளார்.

பொதுவேலைத் திணைக்கள பொறியியலாளருக்கு திரு. எஸ். ஜே. வி. எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாவது:

அச்சுவேலிபண்டத்தரிப்பு வீதியில் தெல்லிப்பழை சந்திக்கருகாமையில் உள்ள வீதி படுமோசமாயிருக்கிறதென்றும், மூன்று வருடங்களுக்கு மேல் அவ்வீதிகளில் கற்கள் குவிக்கப்பட்டும் இன்னும் ஒருவிதமான திருத்தமும் நடைபெறவில்லையென்றும் இதற்கான நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ளுமாறும் கேட்டுள்ளார்.

காங்கேசன்துறை- யாழ்ப்பாணம் வீதியில் தெல்லிப்பழை சந்திக்கருகாமையில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குமுன்னுள் உள்ள மல் தரிப்பு நிலையத்தில் மழைகாலங்களில் மழைத் தண்ணீர் தேங்கி நின்று வீதியால் செல்லும் மக்களுக்கு இடையூறு உண்டு பண்ணிவருவதாகவும் இவ்விடத்தில் வீதி சரியான முறையில் திருத்தப்படவில்லையென்றும் இதுவிஷயத்திலும் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் மேலும் அக் கடிதத்தில் திரு. எஸ். ஜே. வி. கேட்டுள்ளார்.

## எம்.பி. பார்வையிட்டார்

ஊர்காவற்றுறை, சனி

புதிதாகக் கட்டி முடிக்கப்பட்ட ஊர்காவற்றுறை தபாற் கந்தோரில் தளபாட வசதிக் குறைபாடுகள் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

தீவுப் பகுதி எம்.பி. நேற்று நண்பகல் பிரஸ்தாப கந்தோருக்கு நேரில் சென்று பார்வையிட்டார். தபால் அதிபர் எம்.பி.யிடம் தபாற் கந்தோரின் தேவைகள் பற்றி எடுத்துரைத்தார்.

சரவணை

## நாவலர் விளையாட்டு கழக விழா

ஊர்காவற்றுறை, சனி

இம்மாதம் 11ம் திகதி சரவணை நாவலர் விளையாட்டு மைதானத்தில் சரவணை நாவலர் கழகத்தின் ஏழாவது ஆண்டு விழா நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

தீவுப்பகுதி எம். பி. திரு. நவரத்தினம் தலைமையில் நிகழும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் கலந்துகொள்வார். திருமதி சபாரத்தினம்பரிசில்களை வழங்குவார்.

மாட்டு வண்டிச் சவாரி போட்டி, சைக்கிள் ஓட்டப்போட்டி, மாணவர் விளையாட்டுப் போட்டி என்பன விழாவில் இடம்பெறும்.

## சங்கானையில் நாளை கூடி ஆராய்வர்

சங்கானை, வெள்ளி

உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு புதிய திட்டங்களை ஆராய்ந்து அவற்றைக் கிராமப்புறங்களுக்குப் பரப்பி பயன்பெறும் நோக்குடன் விவசாய விஸ்தரிப்புப் பகுதியினர் விசேஷ கூட்டம் ஒன்றை இம்மாதம் 10-ந்திகதிகாலை சிவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் ஒழுங்கு செய்துள்ளனர்.

கமத்தொழில் உதவி ஆணையாளர் திரு. எஸ். சிதம்பரப்பிள்ளை தலைமையில நடைபெறும் இக் கூட்டத்தில் வலி-மேற்கு வலி-வடக்குப் பிரிவுகளிலுள்ள 16 பயிர்ச்செய்கைக் குழுக்கள் பங்கு பற்றும். பங்குபற்றும் அங்கத்தவர்களின் மதிய போசனத்திற்கான செலவை அங்கேயே வழங்குவதெனவும் இலாகா தீர்மானித்துள்ளது.

## மீசாலையில் இசைவிழா

யாழ்ப்பாணம், சனி,

மீசாலை தமிழிசை சங்கத்தின் ஆதரவில் நடைபெறும் இசைவிழா இன்று ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறும். வெள்ளை மாவடிப்பிள்ளையார் கோவில் சந்நிதானத்தில் ஆரம்பமாகும் இசைவிழாவின் இன்றைய நிகழ்ச்சிகளுக்கு ஸ்ரீ ல ஸ்ரீ சுவாமி நாதத் தம்பிரான் சுவாமிகள் தலைமை வகிப்பார். இன்றைய நிகழ்ச்சிகள் விபரம்: பிற்பகல் 6.45 மணி: இசைச் சங்க மத்தியபிரிவு மாணவிகள்பாட்டு. 7.15 மணிதலைமைபேருரை. 7.30 மணி: இசைச்சங்க மேற்பிரிவு மாணவிகள் பாட்டு. இரவு 9.45 மணி: அரியாலையூர் சகோதரர்கள் பாட்டு.

சிங்கம் மார்க்

LION BRAND SANDANADI THYLAM

சிங்கமார்க்

சந்தனாதித் தைலம்

வாங்கி உபயோகியுங்கள், எங்கும் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-

போன் 2300

ப.மு. ஃசன்ஸ்.

88. செட்டியார் தெரு. கொழும்பு

கிளிநொச்சி

## கார்வாலியோ கடத்தல் வழக்கு

சாவகச்சேரி, வெள்ளி

''நான் இருல் பிடித்து விற்பவன். பரந்தனிலுள்ள கார்வாலியோவைத் தெரியும் அவர் இருல் வாங்கி ஐஸ்போட்டுக் கொழும்புக்கு அனுப்புவார். அவருக்கு முன்பும் எதிரியான பொன்னையா தனபாலசிங்கம் இருல் வாங்குவார். தனபாலசிங்கம் சுமார் ஆயிரத்து ஐந்நூறு ரூபாவிற்கும் கார்வாலியோ சுமார் இருநூறு ரூபாவிற்கும் வாங்குவார். இவ்வருடம் ஜூன் 21-ந்திகதி வழக்கம்போல் நான் இருல் பிடித்துக் கார்வாலியோவைப் பார்த்து நின்றேன். என்னுடன்வேறு சிலரும் நின்றனர். கார்வாலியோ வராத காரணத்தால் அவரைத் தேடிப் பரந்தனுக்குச் சென்றேன். அங்கு கார்வாலியோ இல்லை. அவருடைய சமையற்காரனைக் கேட்டபோது அவர் வெளியில் சென்றுவிட்டதாகக் கூறினர். ஒருவரைக் குளறக் குளறக் காரில் கொண்டு செல்வதாகக் கந்தசாமிஎன்னிடம் கூறினர்.''

கிளிநொச்சி இருல் வியாபாரி வழக்கு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டபோது சாட்சியமளித்த சோமு சோமாலை என்பவர் மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கில் இவ்வருடம் ஜூன்மாதம் 21-ந்திகதி சட்டவிரோதமாகக் கூட்டம் கூடியது, பயங்கர ஆயுதங்களுடன் காணப்பட்டது, இருல் வியாபாரியான எம். கார்வாலியோவைக் கடத்தியது, 3 நாட்கள் அவரைக் காட்டில் வைத்தது, பலாத்காரம் பிரயோகித்தது, கையால் அடித்தது ஆகிய குற்றச்சாட்டுக்கள் உட்பட பத்துக் குற்றச்சாட்டுகளின் பேரில் சதாசிவம் ரத்தினம், பிலிப் ராசதுரை, கதிரவேலு காளிமுத்து, பி. தம்பிராசா அல்லது நவசிவாயம், கே. தம்பிராசா அல்லதுசின்னத்துரை, பொன்னையா தனபாலசிங்கம் ஆகிய ஆறு பேர் மீதும் குற்றஞ்சாட்டிக் கிளிநொச்சிப் பொலிசாரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் புரக்டர்கள் எஸ். பி. மயில்வாகனம், வி. செல்லத்தம்பி, கே கந்தசாமி ஆகியோரின் அனுசரணையுடன் அட்வகேட் ரீ. தம்பித்துரை ஆஜரானர். வழக்காளி தரப்பில் கிளிநொச்சிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் பி. ராஜேஸ்வரன் வழக்கை நடாத்தினர். சோமாலை தொடர்ந்துதமது சாட்சியத்தில் ''பரந்தனில் உள்ள பெற்ரோல் ஷெட்டிலும் கார்வாலியோ காரில் சென்றதாகக் கூறியதால் கி. ச. அங்கத்தவர் சோமசுந்தரம் என்பவருடன் பொலிசுக்கு முறையிடப் போனேன். சார்ஜன்ட் இல்லாமையால் தாம் பதியமுடியாதெனப் பொலிசார் மறுத்தனர். உடனே நாங்கள் வடபகுதிபொலிஸ்சுப்பிரின்டனிடம் போய்க் கூறினேம். அவர் பளை பொலிசிற்கு ஒரு துண்டு தந்தார். பின் அங்கு முறையிட்டோம் என்றார். வான் சாரதி ரி, தவராசாவும் சாட்சியமளித்த பின் மேல் விசாரணை இம்மாதம் 30 ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## கண்டெடுத்த அடைவுசீட்டு

யாழ்ப்பாணம்பஸ்நிலையத்தில் அடைவுசீட்டு ஒன்று கண்டெடுக்கப்பட்டு பஸ் நிலைய பொறுப்பதிகாரியால் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அத்தாட்சி காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

சனி 9-9-67

[செய்திகள் காலை 7-00 பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00]

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-30 நாதாஞ்சலி. 6-35 சைவ நற் சிந்தனை- எஸ். தனபாலசிங்கம். 6-40 கத்தோலிக்க நற்சிந்தனை - சங்கைக்குரிய எம். ஜி. அல்பிரட், 6-45 துதிப் பாடல்கள், 7-25 தினக் குறிப்பு, 7-30 குரல்வகை. 7-45 திரை இசை. 8-15 இஸ்லாமியகீதங் கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம் 1-00 கதம்பஇசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 இளைஞர்மன்றம்.

இரவு 6-15 வயலின்— எஸ். வைத்தீஸ்வரஐயர், 6-45 கிராமசஞ்சிகை, 7-15 செய்திச்சுருள், 7-30 குங்குமம்—மாதர்நிகழ்ச்சி, 8-00 முஸ்லீம்நிகழ்ச்சி' 9-30 உரைச்சித்திரம். 10-00 நேயர்விருப்பம்.

## லொறிசாரதிக்கு அபராதம்

காங்கேசன்துறை, வெள்ளி

உடுவிலைச்சேர்ந்த சிவபாதலிங்கம் என்பவர் சுகாதாரத்திற்கு ஊறு விளைவிக்கும் வகையில் பிரதான வீதியில் லொறியைச் செலுத்தி புகையடித்ததாக காங்கேசன்துறை பொலிஸ் சார்ஜன்ட் எம். பி. வேலுவினல் குற்றம் சாட்டி மல்லாகம் மேலதிக மாஜிஸ்திரேட் திரு. எஸ். ஆனந்த குமாரசாமி முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. எதிரிக்கு நீதிபதி 25 ரூபா அபராதம் விதித்தார்.

## இ. போ. சபைக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், சனி

நல்லூர் கந்தசாமி கோவில் திருவிழா உற்சவ காலங்களில் பஸ் சேவையைத் திறம்பட நடத்தியதற்காக பிராந்திய மனேஜர் திரு. கே. வேலுப்பிள்ளையையும், பஸ் நிலைய மனேஜர் திரு. ஆர். நல்லநாதனையும், இ. போ. ச. ஊழியர்களையும் பொதுமக்கள் பாராட்டியுள்ளனர்.

குதிரை மார்க் வாளிகள்



குதிரை மார்க் கல்வனைஸ்ட் வாளிகளை வாங்கி உபயோகிக்கிறீர்களா?

இன்றே வாங்குங்கள்

குதிரை மார்க் வாளிகள் தரத்தில் உயர்ந்த இரும்புத் தகடுகளினல் செய்யப்பட்டவை. எங்கள் தொழிற்சாலையில் மட்டும் கல்வெக்ஸ் முறைப்படி விசேஷமாகத் தயாரிக்கப்படுவன. உங்களுக்கு வேண்டிய எல்லாவித அளவுகளிலும் கிடைக்கும்

குதிரை மார்க் • HORSE BRAND •

தயாரிப்பாளர்கள்:-

தலைமைக்காரியாலயம்:- எல்பிஹெம்ஹவுஸ் கொழும்பு.

தொழிற்சாலை:- எல்பிஹெம் ஹவுஸ் மாவிட்டபுரம்.

வடமாகாண விநியோகஸ்தர்கள்:- தனலக்ஷுமி ஸ்ரோர்ஸ் தெல்லிப்பழை.

கையிருப்பாளர்கள்:-

1. மஸ்கன்ஸ் லிமிட்டெட், கொழும்பு - 12.

2. என். வைத்திலிங்கம் அன் கோ, 3-ம் குறுக்குத்தெரு, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

காரைநகர் கிராமசபை

### கேள்வி விளம்பரம்

1. 1967-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 21-ந் திகதி வியாழக்கிழமை காலை 9-30 மணிவரை முல்லைப்பிலவு—வடகாட்டுச் சுடலை றேட் வேலைக்கு காரைநகர் கிராம சபைத் தலைவரால் சீல் வைத்த கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. இதன் பிரதி யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அதே திகதியிலும் நேரத்திலும் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

3. உத்தியோகபூர்வமான கேள்விப்பத்திரங்கள் 19-9-67-ந் திகதி பிற்பகல் 3 மணிவரை ரூபா 50 கட்டுக்காசும் பத்திரக் கிரயமாக ரூபா 5-ம் கட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

4. இவ்வேலை விபரங்கள் யாவும் காரைநகர் கிராம சபையிலும், யாழ்ப்பாணம் உள்ளூராட்சி அமைச்சு அலுவலகத்திலும் பார்வையிடலாம்.

கா. க. விசுவலிங்கம்
தலைவர்
கிராமசபை, காரைநகர்
கிராமசபை அலுவலகம்,
காரைநகர்.
7-9-67. 239

அரசாங்க கேள்விகள்
வித்தியா பகுதி

என் 2626-மன்/விடத்தல்தீவு மகாவித்தியாலயக் கட்டிடவேலை, கேள்விகள் முடிவு திகதி 29-9-67.

நீர்ப்பாசனத் திணைக்களம்

என் 2642 யாழ்ப்பாண உபபிரிவில் [1] அக்கராயன் குளக்கட்டுக்குபுல் அடித்தல்

[2] விசுவமடுக் குளத்தின் இடதுகரை பிரதான வாய்க்காலின்கீழுள்ள 1-ம் இலக்க விநியோக வாய்க்காலில் 2-ம் கட்டை அமைத்தல்.

இதன் முழுவிபரங்களுக்கும் 8-9-67 இல் வெளியான அரசாங்க வர்த்தமானியின் I-ம் பகுதி, II-ம் தொகுதியைப் பார்க்கவும். இதன் பிரதிகளைச் சகல கச்சேரிகளிலும், பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் கந்தோர்களிலும், தபாற் கந்தோர்களிலும், உபதபாற் கந்தோர்களிலும், புகையிரத நிலையங்களிலும் பார்வையிடலாம்.

G. P. 4862

### பால் கட்டப்பட்டது

புன்னாலைக்கட்டுவன், வெள், ஊரெழுப் பகுதியிலுள்ள குழந்தைகளுக்கு நேற்று முன்தினம் ஊரெழு ப.நோ.கூ. பண்டகசாலை மண்டபத்தில் பால் கட்டப்பட்டது.


ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA.
தினசரி 2-30, 6-30, 930
மூன்று காட்சிகள்
மனோஜ் குமார்
ஷர்மிலா தாகூர்
நடித்த
ஸவான் கி காட்டா
[ஹிந்தி]



நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
சிவாஜி
கே. ஆர். விஜயா
நடித்த
செல்வம்



இப்பொழுது நடைபெறுகிறது
கெபிடல் [கொட்டாஞ்சேனை] பிளாஸா [வெள்ளவத்தை] விஜயா [மட்டுநகர்]
விஜிதா [ஹட்டன்] மொடர்ன் [பதுளை] ஸ்ரீகிருஷ்ணா [திருமலை]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
புதுமையான கதை! உணர்ச்சிமிக்க வசனம்!
காதிற்கினிய பாடல்கள்!
முழுவதும் ஒரு ஹாஸ்ய விருந்து!
ஜெய்சங்கர், ரவிச்சந்திரன், நாகேஷ்,
விஜயலட்சுமி, ரத்னா, மாதவி
நடித்த



நாம் மூவர்
டைரக்ஷன்: ஜம்பு பாடல்கள்: வாலி இசை: என்.எம்.எஸ்.
2-வது மாதம்
கிங்ஸ்லி [கொழும்பு] வெம்பிளி [கண்டி]
மற்றும் 4 திரைகளில்
எம். ஜி. ஆர். — சரோஜாதேவி நடித்த
அன்பே வா


# காான்ஸ்டபிள் தாக்கியதாக நீதிபதியிடம் முறையீடு

யாழ்ப்பாணம், வெள்ளி

கொடிகாமத்தில் வைத்து, பொலிஸ் கான்ஸ்டபிள் டானியல் தன்னைத் தாக்கி காயப்படுத்தியதாக, பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவைச் சேர்ந்த பஸ் சாரதி எஸ். மாணிக்கம் நேற்றுக்காலை சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி வி. எம். குமாரசாமியிடம்கூறி, காயத்தையும் காட்டினார். நீதிபதி அவரை யாழ்ப்பாணம் சட்ட வைத்திய அதிகாரியிடம் பரிசோதனைக்குக் கொண்டு செல்லுமாறு தெரிவித்தார்.

கொடிகாமம் சந்தையில், நேற்றுமுன் தினம் மாலை, சாவகச்சேரி பொலிஸார், செ. மாணிக்கம், கே. சந்தையா ஆகிய இருவரையும் கைதுசெய்து நேற்றுக்காலை சாவகச்சேரி மாவட்ட நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

இதுசம்பந்தமாக பொலிஸாரால் அணைக்கப்பட்டிருந்த அறிக்கையில், இவர்கள் அமைதிக்குப் பங்கம் உண்டு பண்ணும் பேச்சுகளில் ஈடுபட்டிருந்தார்களெனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

சந்தேகநபர்சார்பில் ஆஜரான புறக்டர் எஸ். கே. திரவியநாயகம், புறக்டர் கே. ஞானச்சந்திரன் ஆகியோர் இவர்களுக்கு மாறாக பொதுமக்களில் எவரோ, எந்தச் சமூகத்தினருமோ பொலிசாருக்குப் புகார் செய்து, கைது செய்யப்படவில்லையென்றும், பொலிஸ்கான்ஸ்டபிள் ஒருவர்மட்டும் தனது இஷ்டப்படி இவர்களைக் கைது செய்து அடித்துக் காயப்படுத்தியுள்ளாரென்றும், முதலாவது சந்தேக நபரான மாணிக்கம், இலங்கை போக்குவரத்துசபை ஊழியரென்றும், இவர்களைப்பிணையில் விடுமாறும் கோரினர்.

பொலிஸார் இப்படி நடப்பது கலவரத்தைத் தூண்டி விடுமேயொழிய, சமாதானத்தை நிலவச் செய்யாதென்றும், புறக்டர் திரவியநாயகம், நீதிபதியிடம் தெரிவித்தார்.

நீதிபதி முதலாவது சந்தேகநபரை, யாழ்ப்பாணம் சட்ட வைத்திய அதிகாரியிடம் பரிசோதனை செய்யுமாறுகோரி, இரு சந்தேக நபர்களையும் 12-ந் தேதி வரை ரிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

# திருமலை பாடசாலைகளில் விஞ்ஞான தரம் குறைவு

மூதூர், வெள்ளி

திருக்கோணமலை மாவட்டத்தில் இயங்கும் பல மகா வித்தியாலயங்களில் விஞ்ஞானக்கல்வியின் தரம் மிக மோசமாய்க் காணப்பட்டு வருகிறது. இதனையிட்டு பெற்றோர் கவலையடைந்து வருகிறார்கள். இதற்கு மூல காரணமாய் உள்ளது, விஞ்ஞான போதிப்புக்கபன பட்டதாரி ஆசிரியர்கள் இங்கு இல்லை என்பதே.

திருக்கோணமலை மாவட்டத்தைச் சுற்றியுள்ள தம்பலகாமம், குச்சவெளி, மூதூர், கிண்ணியா, தோப்பூா, சம்பூர், ஆகிய மகா வித்தியாலயங்களில் இன்றைய தேவைக்குத் தக்க தாய் விஞ்ஞான பட்டதாரிகளில்லை எனப்பொதுவான அபிப்பிராயம் நிலவுகிறது. இங்கு கடமை செய்து வருபவர்களும்சந்தப்பங்களை சாட்ட்ாகவைத்து செய்து வருபவர்களும் வேறிடங்களுக்கு இடமாறிச் சென்று விடும் நிலையிலே உள்ளதாகத் தெரிகிறது.

மேற் குறிப்பிட்ட மகா வித்தியாலயங்களில் விஞ்ஞான போதனை பல வருடங்களாக நடந்து வந்தும் குறிப்பிடத்தக்க அளவு மாணவர்கள் தானும் விஞ்ஞான பாடங்களில் தேறவில்லையென்றும் அறியப்படுகிறது.

விஞ்ஞானப் பாடங்களைப் படிக்க மாணவர்கள் ஆர்வம் காட்டினாலும் போதிய ஆசிரியர்கள் இல்லாததால் மாணவர்கள் தமது ஆவலைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையிலிருப்பதாகவும் தெரிகிறது.

### உதவி டைரக்டரானார்

யாழ்ப்பாணம், சனி

இதுவரை வடமாகாண சமூகசேவைப் பகுதியின் அதிபராகக்கடமையாற்றியதிரு என். சிவசிதம்பரம் இம்மாதம் தொடக்கம் உதவி டைரக்டராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார். தமது சேவைக்காலத்தில் அவர் ஆற்றிய தொண்டுக்காக திரு. சிவசிதம்பரம் பல சமூக மக்களாலும், சங்கங்களாலும் பாராட்டப்பட்டார். [வி. நி.]

### மேலதிக அதிபர் நன்றி

யாழ்ப்பாணம், சனி

இலங்கையில் என்றும் நடந்திராத வகையில் ஒரு சிறந்த பெரிய கைத்தொழில் விவசாயப் பொருட்காட்சியை நடத்தி முடித்ததற்காக அரசாங்கத்தின் முக்கிய உறுப்பினர்கள் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினத்தைப் பாராட்டியதைத் தொடர்ந்து மேலதிக அரசாங்க அதிபர் இப் பொருட்காட்சிக்கு உதவிய சகல அதிகாரிகளுக்கும், விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும் தமதுநன்றியைத் தெரிவித்துக்கொண்டுள்ளார்கள். (வி. நி.)

### கி. ச. உப தலைவர்

பூநகரி, சனி

பூநகரி கிராமசபை உப தலைவர் தெரிவு கிராமசபை மண்டபத்தில் தலைவர் திரு. ரி. செல்லத்துரை தலைமையில் நடைபெற்றது. உப தலைவராக கறுக்காய்த்தீவைச் சேர்ந்த திரு. என். நடராசா ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.


REGAL JAFFNA
Times 4-30 7-00 p. m.
9-45 p. m.
Audid Murphy
Ben Cooper
in
Gun Fight at
Comanche Creek



MANOHARA
JAFFNA
Daily at 4-45, 7-00 & 9-45
William Holden
Audrey Hepburn
in
PARIS WHEN
IT SIZZLES



சந்திரா வெல்டிங் வேக்ஸ்
குறைந்த செலவில் சிறந்த முறையில்
வெல்டிங் வேலைகள் செய்வதற்கும் கேற், கிறில், யன்னல்
ஓடர் வேலைகளுக்கும் சிறந்த இடம்
சந்திரா வெல்டிங் வேக்ஸ்
105, அம்பலவாணர் வீதி, அத்தியடி,
யாழ்ப்பாணம்.
238


## வரிவிளம்பரம்

### தேவை

பெண்நெசவாளர்:
பயிற்சியுள்ள பெண் நெசவாளர்கள்தேவை. விபரங்களுக்கு எழுதவும்: ''கதர்ஸ்'' நெசவு நிலையம், 44 ஆஸ்பத்திரிவீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். 2352

ஆசிரியைகள்
G. C. E. ஐந்து பாடம் சித்தியடைந்தவர்கள் ஆசிரியைகளாகக் கடமையாற்றத் தேவை. உரொக்கப் பிணை செலுத்தக்கூடியவர்கள் விண்ணப்பிக்கவும். வடமாகாணத்தில் பல பாகங்களிலும் உள்ள விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். காலை 9 மணி முதல் மாலை 3 மணிவரை நேரில் விண்ணப்பிக்கவும். அதிபர், சிறுவர் பாடசாலை, 422, K. K. S. வீதி, வண்ணார்பண்ணை. 2350

ஆங்கில அனுபவமுள்ளவரும் போதிய நற்சாட்சிப் பத்திரங்களையுடையவரும் பிணைப்பணம் கட்டக்கூடிய வருமான ஒருவர்குமாஸ்தா காசாளர் வேலைக்கு தேவை. கைத்தொழில் நிலையங்களில் கடமையாற்றியவர் மிகவும் விரும்பத்தக்கது. 11-9-67 க்கு முன்னதாக நேரில் வரவும். விபரங்களுக்கு: த. சுப்பிரமணியம், 'சந்திரா வெல்டிங் வேக்ஸ்', 105, அம்பலவாணா வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். 2536

### விற்பனைக்கு

மோட்டார் சைக்கிள்;
திறமையான நிலையிலுள்ள E. Y. 4719 இலக்க மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்க- யோகநாதன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், பிரதான வீதி, யாழ்ப்பாணம். 2351

### அரியநாயகத்துக்கு அஞ்சலி

கொழும்பு, வெள்

மறைந்த காந்தியசர்வோதயத் தொண்டர் திரு. அரியநாயகத்துக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக வெள்ளவத்தை ராமகிருஷ்ண மண்டபத்தில் சென்ற புதன் கிழமை செனட் சபைத் தலைவர் திரு. ரத்நாயகா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு அரிய நாயகத்தின் அரிய சேவை பற்றியும் அவரது தியாக வாழ்க்கைபற்றியும் முதலியார் திரு. சின்னத்தம்பி, வண. துண்ணேசுமன திஸ்ஸ தேரோ திரு. சி. க. வேலாயுதபிள்ளை திரு. எம். ஏ. திலகரத்னா, திரு. சோ. க. தம்பிப்பிள்ளை ஆகியோர் பேசினர். சர்வோதய சிரமதான இயக்க அமைப்பாளர் திரு. ஏ. டி. ஆரியரத்னா வரவேற்புரை நிகழ்த்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ''தமிழ் கவிதைத்துறை ஈழத்தில் முன்னேற்றம் அடைந்துள்ளது''

## நூல் வெளியீட்டு விழாவில் பேச்சு

யாழ்ப்பாணம், சனி
'கவிதைத்துறையில் ஈழத்து தமிழ் கவிஞர்கள் கணிசமான முன்னேற்றம் அடைந்துள்ளார்கள் என்று சொல்லலாம். நல்ல கருத்தை தகுதியான கருப்பொருளில் அமைத்து கற்பனைச் செறிவுடன் தெளிந்த முறையில் கவிதைகளை யாப்பதில் கைதேர்ந்த பலர் நம்மிடையே இருப்பது ஈழத்துக்கு பெருமையையே அளிக்கிறது கவிஞர் கந்தவனத்தின் கவிதையில் விறுவிறுப்பும் நகைச்சுவையும் ஓடுவதைக் காணமுடிகிறது''.

யாழ். மாநகரசபை பொழுது போக்கு மண்டபத்தில் நடைபெற்ற கவிஞர் வி. கந்தவனத்தின் 'ஏனிந்த பெருமூச்சு?' என்ற கவிதை நூல் வெளியீட்டு விழாவில் தலைமையுரை நிகழ்த்துகையில் திரு. ஏ. ரி. பொன்னுத்துரை மேற்கண்டவாறு சொன்னார். உடுவில் எம்.பி. திரு. வி. தர்மலிங்கம் முதற் பிரதியை வாங்கினார்.

செல்வி புலவர் க. பூரணம் நூல்பற்றி ஆய்வுரை நிகழ்த்துகையில் கூறியதாவது:-

''உயர்ந்த குறிக்கோள், உணர்ச்சிமிகு கற்பனைவளன் கலைஉள்ளம், எதுகைமோனை அழகிய சொற்கூட்டம் இவை சிறந்த கவிதையை உருவாக்குகின்றன. சிறந்த கவிதை நம்மைத் திரும்பத் திரும்பபடிக்கும் ஆர்வத்தினை ஏற்படுத்துகிறது. திரும்பத் திரும்பப் படிக்கும் போது உள்ளம் கவிதா உணர்ச்சியைப் பெறுகிறது. கவிஞர் கந்தவனத்தின் கவிதைகளைப் படிக்கும் போது இந்தக்கவிதா உணர்ச்சியை நாம் பெறமுடிகிறது.

'ஏனிந்தப் பெருமூச்சு' என்றஇக்கவிதைத் தொகுப்பு திரு. கந்தவனம் சிறந்த கவிஞர் எனமுத்திரையிடுகிறது. மலைநாட்டுத் தொழிலாளரின் அவலநிலையினைக் கண்டு கவிஞர் விடும் பெரும் மூச்சே இக்கவிதைத் தொகுப்பின் பெயராக அமைந்துள்ளது, தமிழைவளம் படுத்திய பெருமையில் இஸ்லாம் புலவர்களுக்கும் பெரும் பங்கு உண்டு. இதனை எடுத்துக்காட்டுவது போலவும் இஸ்லாம் தமிழ்மக்களின் ஒற்றுமையைப் பிரதிபலிப்பது போலவும்ஐந்து கவிதையில் ஒன்று இஸ்லாம் புலவருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது''.

மற்றும் பலரும் பேசினர் கவிஞர் கந்தவனம் நன்றி கூறினர்.

## மரண அறிவித்தல்

**மாணிக்கத்தபிம் (மேஸ்திரி)**

ஓவியரும் புகைப்படத் தயாரிப்பாளருமான திரு. நீ. பி. மாணிக்கத்தம்பி காலமானார். இவர் அடைக்கலமுத்துவின் அன்புக் கணவரும், வண. பிதா பிலிப் அந்தோனிப்பிள்ளை,O. M. I. நிக்கலாஸ் (செல்லம்ஸ்), பிரான்ஸிஸ், மத்தியூஸ், திருமதி றேஸ் ஸ்ரனிஸ்லாஸ், திருமதி திரேசா மாட்டீன் ஆகியோரின் தந்தையாருமாவார், அன்னாரின் பூதவுடல் யாழ்ப்பாணம், 6 ம் குறுக்குத்தெரு, 23 ம் இலக்க இல்லத்திலிருந்து இன்று சனிக்கிழமை பி. ப. ஐந்து மணிக்கு சென். மேரீஸ் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்கு எடுத்துச் செல்லப்படும். 2538

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால்யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலவீதி 63-ம் இல் த்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம்ஆண்டு செப்டம்பர்மாதம்9-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

## தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வியாழன் இன்று இரத்மலானையில் இழுக்கப்பட்ட தேசிய லொத்தர்சபையின் 158வது சீட்டிழுப்பு முடிவுகள் வருமாறு:-

முதலாம் பரிசு

37 T 0217 ரூ. 100,000

இரண்டாம் பரிசு

41 U 0735 ரூ.40,000

மூன்றும் பரிசு

17 B 0342 ரூ. 10,000

547 ரூபா 50 சதம்பெறும் 100 ஆறுதல் பரிசுகள்:-

| | |
|---|---|
| 07 W 0628 | 34 N 0687 |
| 31 H 0908 | 14 T 0496 |
| 09 R 0372 | 18 Q 0727 |
| 04 X 0144 | 28 P 0782 |
| 10 P 0150 | 17 H 0812 |
| 22 B 0163 | 25 E 0691 |
| 25 M 0630 | 22 Y 0034 |
| 23 S 0904 | 36 F 0263 |
| 35 U 0372 | 35 F 0234 |
| 05 A 0734 | 36 J 0401 |
| 22 P 0972 | 02 C 0952 |
| 12 S 0894 | 26 Y 0803 |
| 26 A 0703 | 15 Z 0846 |
| 21 N 0106 | 06 G 0529 |
| 14 N 0180 | 04 N 0091 |
| 05 A 0769 | 37 E 0085 |
| 08 N 0579 | 23 X 0765 |
| 20 G 0327 | 25 F 0421 |
| 24 D 0051 | 05 T 0515 |
| 12 M 0097 | 17 W 0940 |
| 37 F 0589 | 32 V 0048 |
| 31 B 0166 | 27 P 0405 |
| 33 Q 0421 | 21 R 0330 |
| 03 G 0021 | 19 H 0062 |
| 40 L 0456 | 24 R 0826 |
| 20 Z 0713 | 32 G 0839 |
| 29 R 0080 | 35 B 0211 |
| 26 C 0139 | 23 J 0695 |
| 23 D 0182 | 26 X 0827 |
| 33 K 0123 | 16 Y 0394 |
| 30 Q 0175 | 37 K 0039 |
| 30 H 0570 | 28 C 0902 |
| 40 S 0116 | 10 O 0405 |
| 38 B 0312 | 11 L 0338 |
| 09 E 0033 | 01 S 0628 |
| 05 Q 0442 | 19 X 0250 |
| 19 M 0830 | 18 N 0909 |
| 03 C 0876 | 13 A 0627 |
| 30 C 0347 | |
| 22 F 0812 | 01 P 0372 |
| 20 L 0017 | 28 A 0760 |
| 53 D 0296 | 39 O 0834 |
| 40 U 0155 | 32 U 0082 |
| 05 X 0888 | 30 L 0189 |
| 09 P 0941 | 06 C 0410 |
| 04 H 0370 | 06 M 0624 |
| 16 W 0094 | 02 T 0219 |
| 38 V 0489 | 19 S 0170 |
| 13 F 0188 | 04 P 0342 |
| 41 X 0890 | 21 D 0928 |
| 03 K 0618 | |

(இவை உறுதிப்படுத்தப் படவேண்டும்)

கொழும்பு

## மீன் விற்பனை நிலையங்கள்

கொம்பனித்தெரு, வெள்ளி
இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தினால் பாவனையாளர்களின் நலனை முன்னிட்டு கொழும்பின் பல பகுதிகளிலும் நிறுவப்பட்ட மீன் விற்பனை நிலையங்கள் மிகவும் துப்புரவற்றநிலையிலிருப்பதாகவும், இந்த விற்பனை நிலையங்களினால் பக்கத்தில் இருக்கும் வீடுகள், கடைகள் முதலியவற்றில் ஒரே துர்நாற்றம் வீசுவதாகவும் சூழவுள்ள மக்களின் சுகாதாரம் பாதிக்கப்படுவதாகவும் கொழும்பு மாநகரசபையினருக்கு அறிவிக்கப்பட்டும் மாநகரசபை எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லையென பேச்சிகொள்ளப்படுகிறது.

## பழைய அங்கத்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

எடுக்கப்படவில்லை.

### இப்போது அவசியமில்லை

முன்னாள் உதலி மேயரி திரு. கே. வி. தெய்வேந்திரன் கூறியதாவது.

கமிஷனர் ஆட்சியில் தனிப்பட்ட ஒரு கட்சியின் வேலைகள் மட்டுமே கவனிக்கப்படுகிறது. மற்றைய எல்லாக்கட்சியினரும் புறக்கணிக்கப்படுகின்றனர். ஜனநாயகம் நிலைபெறவேண்டுமானால் தேர்தல் நடைபெறவேண்டியது அவசியம். தேர்தல் நடத்துவதற்கு மந்திரி முன்வந்ததை வரியிறுப்பாளர் எல்லோரும் வரவேற்கின்றனர்.

மாநகரசபை கலைக்கப்பட்டதற்குக் காரணம் இந்த மேயர் பிரச்னைதான்.

கமிஷனர் நிர்வாகத்தில் வரியிறுப்பாளர்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர். கமிஷனரை சந்திக்கமுடியாமல் தவிக்கின்றனர். இந்த நிலையில் விரைவில் தேர்தல் நடைபெறவேண்டும். மந்திரி செய்தது சரியா என்பதையிட்டு மக்கள் தீர்ப்பளிக்கட்டும்.

முன்னாள் மேயர் திரு. மகாதேவாவிடம், நமது நிருபர். மாநகரசபை தேர்தலைப் பற்றி கேட்டபொழுது, வட்டார பிரிவினை நடைபெற்ற பின்பே தேர்தல் நடைபெறவேண்டுமென்பது தனது கருத்து என்று கூறினர்.

## விகிதாசாரப்படி..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தமிழரின் குறைகளையும் கஷ்டங்களையும் உயர்சாதித் தமிழர் எவரும் பார்லிமெண்டில் சரியான முறையில் எடுத்துக் கூறுவதாக இல்லையென்றும் கூறப்பட்டுள்ளது.

உரிமை குறைந்த தமிழர் முப்பது சதவிகிதத்தினர் இலங்கையிலிருப்பதாகக் கூறும் அந்த மகஜரில் அரசாங்க உத்தியோகம் வழங்குவதிலும் பாடசாலைகளில் பிள்ளைகளை அனுமதிப்பதிலும் விகிதாசாரப்படி இடம் ஒதுக்கப்படவேண்டுமென்று கோரப்பட்டுள்ளது. இந்தியாவில் போன்று இங்கு உரிமை குறைந்த தமிழருக்குப் பார்லிமெண்ட் பிரதிநிதித்துவம் கிடைப்பதற்கு சில தொகுதிகள் ஒதுக்கப்படவேண்டுமென்றும் அந்த மகஜரில் கேட்கப்பட்டிருக்கிறது.

## பட்டின சபைத் தலைவர் புகார்

ஊர்காவற்றுறை, வெள்ளி
தீவுப்பகுதி பஸ் சேவை சீர்கேடுபற்றி ஊர்காவற்றுறைப்பட்டின சபைத்தலைவர் புகார் கூறியுள்ளார். தரமான பஸ்களை இங்கு ஓடவிடாமையால்பிரயாணிகள் படும் கஷ்டத்தை இ. போ. ச. மேலதிகாரிகளுக்கு அவர் அறிவித்துள்ளார்.

## சந்தேகத்தின் மீது 5 ஜோடிகள் கைது

கொம்பனித்தெரு, வெள்ளி
கொழும்பு நகரில் உள்ள பூங்கா ஒன்றில் ஐந்து இளம் ஜோடிகள் சந்தேகத்திற்கிடமான முறையில் நடந்து கொண்டதைக் கண்ட சிலர் பொலிசாருக்குத் தகவல் கொடுத்ததன் பேரில் பொலிசார் பூங்காவிற்கு விரைந்து மேற்படி ஐந்து ஜோடிகளையும் கைதுசெய்து கறுவாக்காட்டுப் பொலிஸ் நிலையத்தில் ஆஜர்செய்தனர். இந்த ஐந்து ஜோடிகளில் ஓர் ஆசிரியை, இர[illegible] தாக பொலிஸ்நிலைய அதிகாரி கூறினர். மேற்படி ஐந்து ஜோடிகளும் தலா இருநூறு ரூபாய் பிணையில் விடப்பட்டனர்.

சங்கானை துப்பாக்கி சூட்டு சம்பவம்

# சந்தேகநபர் பிணையில் செல்ல அனுமதி

காங்கேசன்துறை, வெள்ளி
சங்கானையில் அண்மையில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தையொட்டிக் கைதுசெய்யப்பட்ட வி. ஆறுமுகம் என்பவர் மல்லாகம் மேலதிக மாஜிஸ்டிரேட் திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி முன் மீண்டும் ஆஜர்செய்யப் பட்டபோது சந்தேக நபர்சார்பில் ஆஜரானவழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் அவரைப் பிணையில் விடுமாறு கோரியபோது பொலிஸார் ஆட்சேபிக்காதிருக்கவே சந்தேக நபரை 300 ரூபா பிணையில் செல்ல அனுமதித்த மாஜிஸ்டிரேட் இம் மாதம் 19-ம்திகதி மீண்டும் கோர்ட்டில் ஆஜராகுமாறு உத்தரவிட்டார்.

சங்கானை பிரதான வீதியில் பஸ்களுக்கும் கார்களுக்கும் போத்தல்கள்வீசிக் குழப்பம் விளைவித்ததாகச் சங்கானைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த பேரின்பநாயகம், புஷ்பரத்தினம் ஆகியோரையும் பிணையில் விடுமாறு அவர்கள் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் கோரவே சங்கானைப் பொலிஸ் இன்ஸ்பெக்டரின் சம்மதத்துடன் மல்லாகம் மேலதிக மாஜிஸ்டிரேட் திரு. ஆனந்தகுமாரசுவாமி இருவரையும் தலா 300 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து மீண்டும் இம்மாதம் 19 திகதி கோட்டில் ஆஜராகுமாறு உத்தரவிட்டார்.

## கொழும்பில் பாராட்டு

கொம்பனித்தெரு, வெள்ளி
புங்குடுதீவு அரசினர் மகாவித்தியாலய அதிபராகக் ராகக் கடமையாற்றி அண்மையில் ஓய்வு பெற்ற திரு சு. வில்வரத்தினத்துக்கு கொம்புவாழ் புங்குடுதீவு அரசினர் மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கம் பாராட்டு வைபவம் ஒன்றை இம்மாதம் 11-ம் திகதி கொழும்பில் நடத்தவிருக்கின்றனது-

## 'புனித எஸ்தாக்கியார்' நாட்டுக்கூத்து

யாழ்ப்பாணம், சனி
நாவாந்துறை சென். மேரிஸ் சனசமூக நிலைய முத்தமிழ் மன்றத்தின் கலை விழாவை முன்னிட்டு புனித பரலோக அன்னை ஆலய மைதானத் திறந்த வெளி அரங்கில் இரண்டாம் நாள் நிகழ்ச்சியாக ''புனித எஸ்தாக்கியார்'' நாடகம் வரும் ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிக்கு வண பிதா மேரி யோசவ் சுவாமியாரின் தலைமையில் அரகேற்றி வைக்கப்படும்.

## கி. ஜெர்மன் சென்றார்

சங்கானை, வெள்ளி
சங்கானை வலி-மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சமாசங்களின் சமாசத்தில் கடந்த பல வருடங்களாக நிர்வாகக் காரியதரிசியாகக் கடமையாற்றிய திரு. விஸ்வலிங்கம் கந்தசுவாமி ஒரு வருடம் கூட்டுறவுப் பயிற்சி பெறுவதற்காக இம்மாதம் 4 ந் திகதி கிழக்கு ஜெர்மனிக்கு விமானமூலம் சென்றுள்ளார்.

## ''சிறையே சிறந்தது''

ஊர்காவற்றுறை, வெள்ளி
இளைஞர் ஒருவர் தனக்குச் சிறைத்தண்டனை விதிக்குமாறு நீதிபதியிடம் கேட்டுக்கொண்டார். இச்சம்பவம் ஊர்காவற்றுறைக் கோர்ட்டில் நடந்தது எதிரியான இவ்விளைஞரை 3 வருடம் சீர்திருத்தப் பாடசாலைக்குச் செல்லுமாறு நீதிபதி கூறிய போதே அவர் தம்மைச் சிறைக்கு அனுப்புமாறு நீதிபதியைக் கேட்டுக்கொண்டார்.

நாரந்தனையைச் சேர்ந்த ஈச்சங்காடு வாசியான ஜோ. சின்னராசா என்ற 15 வயது இளைஞர் 15 ரூபா திருடியதாக ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கை விசாரணை செய்த நீதிபதி திரு. ஜமீல் எதிரியைக் குற்றவாளியாகக்கண்டு, மூன்று வருடம் சீர்திருத்தப் பாடசாலைக்கு எதிரியை அனுப்பக் கட்டளையிட்டார்.

எதிரி சின்னராசா சீர்திருத்தப்பாடசாலைக்குத் தன்னை அனுப்பாது தனக்கு மறியல் தண்டனை வேண்டுமென நீதிபதியிடம் கோரினர். இவரின் கோரிக்கையை நீதிபதி நிராகரித்து எதிரியைச் சீர்திருத்தப் பாடசாலைக்கு அனுப்பக் கட்டளையிட்டார்.

## தொலைபேசி இல்லாத அவதி

உடுப்பிட்டி, செவ்.
கரவெட்டி மேற்கிலிருக்கும் [அம்பம்] அரசாங்க பிரசவ ஆஸ்பத்திரி இடம் மாறியபடியினால் தற்பொழுது தொலைபேசி வசதியின்றி ஆஸ்பத்திரி ஊழியர்களும், நோயாளிகளும் பெரும் அவதியுற்று வருகின்றனர். சில பிரசவ சமயங்களில் தாய்மார்களுக்கு அவசர சிகிச்சை அளிப்பதற்கு இங்கு போதிய வசதிகள் இல்லாமையினால் மத்திய ஆஸ்பத்திரியுடன் உடனடியாகத் தொடர்பு கொண்டு அம்புலன்ஸ் வாகனத்தை வருவிப்பதில் தொலைபேசி இல்லாமையினால் ஊழியர்கள் பெரும் சங்கடமுற்று வருகின்றனர். உடனடியாக இவ்வாஸ்பத்திரிக்குத் தொலைபேசிவசதி செய்துதருமாறு பொதுமக்கள் அரசாங்கத்தைக் கோரியுள்ளனர்.

## திறப்புக்கோர்வை யாருடையது?

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு முன்னால் திறப்புக் கோர்வையொன்று பால சண்முகதேவன்என்பவரால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் பெற்றுக்கொள்ளலாம்.

## சீனாவில்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இந்த ஸ்தாபனம்தான் இப்பொழுதுமாவோ எதிர்ப்புகளுக்குமறைமுக ஆதரவு செய்துவருவதாகக் கருதப்படுகின்றது.

இத்தகவலை செஞ்சீன செய்தி ஸ்தாபனம் வெளியிட்டிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org